# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

பாடம்:- குடியியல்

சுட்டெண்:.......................  தரம் - 09  நேரம் : 02 மணி

**01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**சரியான விடையின் கீழ் கோடிடுக**

01. இலவச மண்ணில் இலவச ஊழியம் (Free labour infreee Soil) என்பதைத் தடுக்க போராடியவர்?
 1. தோமஸ் அல்வா எடிசன்  2. மர்சலின் ஜயக்கொடி
 3. ஆபிரகாம் லிங்கன்  4. காந்தி அடிகள்

02. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்ட மூலமாக அமைவது
 1. குடியியல் சட்டம்  2. பழக்கவழக்கம்  3. நீதிமன்றத் தீர்ப்புக்கள்  4. அரசியல்யாப்பு

03. பின்வருவனவற்றுள் குற்றவியல் சட்டத்தின் மூலம் விசாரிக்கக்கூடிய பிரச்சினையாகக் கருதப்படுவது?
 1. விவகாரத்து  2. போதைப்பொருள் பாவனை
 3. கடன் அறவிடுதல்  4. நஷ்டஈடு

04. Police என்பதில் e குறிக்கும் பொருள் விளக்கம் ?
 1. வினைத்திறன் மிக்க  2. ஒழுக்கமான  3. நம்பிக்கையான  4. துணிகரமான

05. "நாட்டைச் சுற்றி தங்க வேலை" (The Golden defence Around the country) எனும் மகுட வாசகத்தைக் கொண்ட பாதுகாப்புப்படை
 1. விமானப்படை  2. இராணுவப்படை  3. பொலிஸ்பிரிவு  4. பாதுகாப்புபடை

06. அரசாங்கத்தின் சட்டம் தொடர்பான செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருப்பவர்
 1. பிரதமநீதியரசர்  2. நீதியமைச்சர்  3. சட்டமாஅதிபர்  4. ஜனாதிபதி

07. பின்வருவனவற்றுள் குறைவான அதிகாரத்தைக் கொண்ட நீதிமன்றக்கட்டமைப்பு
 1. மேல்நீதிமன்றம்  2. நீதவான் நீதிமன்றம்
 3. மாவட்ட நீதிமன்றம்  4. உயர்நீதிமன்றம்

08. இலங்கையில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான தகவல்களை வழங்குவதற்குரிய தொலைபேசி இலக்கம்?
 1. 1984  2. 119  3. 1929  4. 1991

09. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பாடசாலை கூட்டுறவுச் சங்களின் எண்ணிக்கை?
 1. 14221  2. 371  3. 1134  4. 1581

10. "வேதாளம்" எனும் கற்பனை விலங்கை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்தைப் பின்பற்றும் ஆசிய நாடு?
 1. சீனா  2. ஜப்பான்  3. தென்கொரியா  4. இந்தியா



kalvi.lk

**சரியாயின் ( ✔ ) எனவும் பிழையாயின் ( ✕ ) எனவும் அடையாளமிடுக.**

11. சமூகத்தின் அடிப்படை அலகு பாடசாலையாகும். ( )
12. வண.பிதா மர்சலின் ஜயகொடி பன்சலையின் பிதா என அழைக்கப்படுகின்றார். ( )
13. தர்மத்துடன் இருப்பவன் தர்மத்தினாலே பாதுகாக்கப்படுவான். ( )
14. இலங்கை ஓரினக் கலாசாரத்தைக் கொண்ட நாடாகும். ( )
15. சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துதல் இந்தியாவின் கலாசார முறையாகும். ( )

**இணைத்தல்**

| | | |
|---|---|---|
| 16. | சிறுவர் துஸ்பிரயோகம் | 1951 |
| 17. | இலங்கை இராணுவம் | 119 |
| 18. | அவசர பொலிஸ் | 1929 |
| 19. | இணக்க சபைகள் | 1949 |
| 20 | இலங்கை விமானப்படை | 1988 |

(20X02= 40 புள்ளிகள்)

## பகுதி - II

**எவையாயினும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01)**

01. நீர் முதலாம் தவணையில் குடியியல் பாடத்தில் செய்த கணிப்பீடு ஒன்றைத் தருக?
02. நீர் அக்கணிப்பீட்டினை மேற்கொள்ள பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் 3 தருக?
03. அக்கணிப்பீட்டினை மேற்கொள்ளும் போது எதிர் கொண்ட இடர்பாடுகள் 4 தருக?

(2+2+4+4=12 புள்ளிகள்)

**02)**

01. சமூக பாதுகாப்பு என்றால் என்ன?
02. சமூகப் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களைப் பெயரிடுக.
03. சமூகப் பாதுகாப்புக்காக பாடசாலைகளினால் ஆற்றப்படும் பணிகள் 4 தருக.
04. சமூகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத போது எழும் பிரச்சினைகள் 4 தருக.

(3+3+3+3=12 புள்ளிகள்)

**03)**

01. சட்டம் என்பதற்கு எளிமையாக வரையறை தருக?
02. சட்டத்தின் மூலாதாரங்கள் 4 தருக?
03. தேசிய சட்டம் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு அதன் பிரிவுகளைத் தருக?
04. சட்டத்தின் பொதுவான பண்புகள் 4 தருக? (2+2+4+4=12 புள்ளிகள்)



kalvi.lk

**04)**

01. அரசாங்கஇரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் மகுடவாசகத்தை குறிப்பிடுக?

02. இராசயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தோடு இணைந்து செயற்படும் நிறுவனங்கள் மூன்று தருக.

03. நீதிமன்றம் தொடர்பான தனிநபர்களின் பொறுப்புக்கள் மூன்று தருக.

04. பிணக்கொள்கை இணக்க சபைக்கு கொண்டு செல்லும் வழிமுறைகள் மூன்று தருக.

(3+3+3+3=12 புள்ளிகள்)

**05)**

01. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் (NCPA) நோக்க கூற்றினைக் குறிப்பிடுக?

02. சிறுவர் பாதுகாப்பு அதிகாரச சபையால் ஆற்றப்படும் சேவைகள் நான்கு தருக?

03. சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தொடர்பாக தனிநபர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் 4 தருக?

(4+4+4=12 புள்ளிகள்)

**06)**

01. தொழினுட்பம் என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

02. தொழினுட்ப மாற்றம் ஏற்பட்ட பொருளாதாரத் துறைகள் 3 தருக?

03. தொழினுட்ப மாற்றத்தால் மனித வாழ்க்கையில் ஏற்பட்ட சாதகமான மற்றும் பாதகமான விளைவுகள் தலா ஒவ்வொன்றுக்கும் மூன்று தருக? (3+3+6=12 புள்ளிகள்)

**07)**

01. பொருளாதாரத்தில் நிகழும் பிரதான செயற்பாடுகள் மூன்று தருக?

02. தொழினுட்ப வளர்ச்சியினால் சமகாலத்தில் உருவாகியுள்ள புதிய தொழில்வாய்ப்புக்கள் மூன்று தருக?

03. தொழினுட்ப வளரச்சியினால் விவசாயத்துறையில் சமகாலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்று தருக?

04. எமது நாட்டிற்கே உரித்தான மூலிகை இனங்கள் மூன்று தருக?

(3+3+3+3=12 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page